**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.322/2018**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 7 |
| Name (திரு/திருமதி) | : தயாளு |
| Father's Name/ Husband's Name | : ராமானுஜம் |
| Village & Taluk | : வளத்தி |
| Calling | : உதவி ஆய்வாளர் |
| Age | : 54 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.05.2026**

1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317/ 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

நான் தற்போது வளத்தி கா.நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் திரு. ஆறுமுகம் என்பவர் தற்போது உடல்நலம் குன்றி இருப்பதாலும் அவரால் சாட்ச சொல்ல இயலாது என்பதாலும் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதாலும் ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 03.11.2017 ம் தேதி பகல் 14.00 மணிக்கு அன்று வளத்தி கா.நிலையத்தில் உதவி ஆய்வாளராக திரு.ஆறுமுகம் என்பவர் பணியில் இருந்த போது செஞ்சி அரசு மருத்துவ மனையில் இருந்து கிடைக்க பெற்ற தகவலை பெற்று செஞ்சி அரசு ம.மனை சென்று சிகிச்சையில் இருந்த அ.சா.1(ஜாஷிராபி) என்பவரிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்து அன்றே நிலையம் வந்து வளத்தி கா.நி குற்ற எண் 433/2017 இதச பிரிவுகள் 294(பி), 323, 448, 506(i) மற்றும் 4of TNPHW Act -ன் கீழ் மு.த.அ பதிவு செய்துள்ளார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ-4-ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு அவர் அன்றைய தினமே பகல் 15.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் நந்தகுமார், சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி மாதிரி வரைபடம் அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு இவ்வழக்கின் சாட்சிகள் ஜாஜிராபீ, கவர்னர்பாட்ஷா, அலிகான், புருஷோத்தமன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்பு சம்பவம் உண்மையென தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரி ஜான்பாட்ஷா என்பவரை கடந்த 03.11.2017 அன்று பகல் 16.30 மணிக்கு வளத்தி கூட்ரோடு அருகே கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார்.

பின்பு அவர் இவ்வழக்கில் காயமடைந்த அ.சா.1(ஷஜிராபீ)–ற்கு சிகிச்சை வழங்கிய செஞ்சி அரசு ம.ம மருத்துவர் திரு. நந்தினி என்பவரை விசாரித்து அ.சா.1–ற்கு ஏற்பட்ட காயத்திற்கு காயச் சான்று பெற்றுள்ளார். மேற்படி காயச் சான்றில் அ.சா.1–ற்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை கொடுங்காயம் என கூறி சான்று வழங்கினார்.

பின்பு அவர் இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 448, 506(i) மற்றும் 4of TNPHW Act –ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கின் புகார் வாக்குமூலமானது கடந்த 03.11.2017 அன்று மதியம் 02.00 மணிக்கு பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.3 காயச்சான்றில் காயமடைந்த நபர் 02.11.2017 அன்று Discharge செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் அ.சா.1 ற்கு பல் விழுந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.1 காவலர்களின் விசாரணையின்போதும் அவருக்கு பல் விழுந்த விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2. மாதிரி வரைபடத்தில் அ.சா.1 கட்டிடத்தின் மேல் தளத்தில் குடியிருப்பதாகவும் கீழ் தளத்தில் அரிசி அறைக்கும் ஆலை வைத்திருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 அவரது வீட்டிற்கு செல்ல வேண்டும் எனில் படிக்கட்டு வழியாகத்தான் செல்ல இயலும் என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் முதலில் எதிரியின் வீடு இருப்பதாகவும் அதற்கு அடுத்த வீடு காலியாக இருப்பதாகவும் அதற்கு அடுத்த வீட்டில் அ.சா.1 குடியிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். .

3. இவ்வழக்கில் ஆயுதங்களை கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1 யிடம் இருந்து ஆவணங்கள் எதுவும் புலன் விசாரணை அதிகாரியால் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எதிரியின் தம்பி மனைவி என்றால் சரிதான். அ.சா.1 ன் கணவருக்கும் 1ம் எதிரிக்கும் இடையே அரிசி அறைக்கும் ஆலை தொடர்பாக பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான்.

அ.சா.1 ன் கணவர் 6 மாதங்களும் 1ம் எதிரி 6 மாதங்களும் மேற்படி அரிசி அறைக்கும் ஆலையை பராமரிக்க வேண்டும் என்று ஒப்பந்தம் எழுதப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

4. அ.சா.1ன் கணவர் 6 மாதங்கள் அரிசி அறைக்கும் ஆலையை பராமரித்துவிட்டு காலக்கெடு முடிந்த பிறகு அதனை 1ம் எதிரியிடம் ஒப்படைக்காததால் அவர்களுக்கு இடையே பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். அ.சா.1 சம்பவத்தன்று தண்ணீர் குடத்தை எடுத்துக்கொண்டு படி ஏறி அவரது வீட்டிற்கு செல்லும்போது தவறுதலாக கீழே விழுந்து அதன் விளைவாக ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் மீது பொய் புகார் அளித்துள்ளார் என்றாலும், புலன் விசாரணை அதிகாரி இவ்வழக்கு தொடர்பாக அரசு மருத்துவமனை சென்று அ.சா.1 யை விசாரிக்கவில்லை என்றாலும், எனவே தான் Discharge அன பிறகு புகார் வாக்குமூலம் பெறப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

5. புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடம் செல்லாமல், இவ்வழக்கினை அவர் சரிவரவிசாரணை செய்யாமல் எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.